கடற்கரை கவியரங்கு! - 605 நாள்: 05—09-2021

# நினைவில் போற்றுவோம்!



விடுதலை என்னும் தேரில்
நாம் விருப்புடன் வாழ்வதற்கு,
கடுமையாய் உழைத்தார் பலருள்
கப்பலோட்டிய தமிழன் உண்டு!
விடுதலை தந்தான் அவனை,
விருப்புடன் நினைப்போம் இன்று!
கொடுமைகள் பலவும் கண்டு,
கொள்வார் இன்றி மறைந்தான்!

இயன்நிலை வாழ்வைத் துறந்து,
இன்னலைப் போர்த்து வாழ்ந்தான்!
அயலாரின் கொடுமை தன்னில்,
அவதியுற்று வெளியே வந்தான்!
தயங்காமல் அவனைக் கண்டார்,
சுப்பிரமணிய சிவா மட்டுமே!
இயல்பாக அவனை இன்றே,
நினைப்பதில் மகிழ்ச்சி கோள்வோம்!

கல்விக்கும் கனிந்த அறிவுக்கும்
ஆசான் கொண்டோம் யாவரும்.
வல்லமை பலவும் காண
வகுத்த ஆசிரியர் தினமாம்!
தொல்லையில் விடுதலை துலங்கிட்ட
தமிழன் பிறந்தநாள் இன்று
அல்லல் மாந்தரை நாளும்
அணைத்த தெரசா தானும்

மண்ணகம் நீங்கி நிறைந்த
மருவிலா நாளாம் இன்று!
கண்ணென மனித நேயம்
கண்டவள் அன்னை தனையும்,
எண்ணிய அறிவாய் கல்வியை
ஈந்த ஆசிரியர் தமையும்,
கொண்டாட விடுதலைக் காட்டிய
கனிவுசீர் தமிழனுக்கும் வாழ்த்து!

- கவிவளவன்,

(05-09-2021)